உ

கடவுள் துணை

அகஸ்திய மகாமுனிவர்
திருவாய்மலர்ந்தருளிய

# குருநாடி சாஸ்திரம்.

இருநூற்றுமுப்பத்தைந்து.

—(-)—

இஃது,

கோகுலாபுரம்.

அருணாசல முதலியாரால்

பார்வையிட்ட பிரதிக்கிணங்க

திருப்பதி,

இரத்தின முதலியார்

அன்டுஸன் அவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

நெ, 34, முத்துகிருஷ்ணன் தெருவு

உ

கடவுள் துணை.

அகஸ்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# குருநாடி சாஸ்திரம்.

## இருநூற்று முப்பத்தஞ்சு.

காப்பு.

ஓங்காரங்கொண்டெழுந்த பிரணவத்தின்செய்கை
யுறறமிகச்சூதிரமா யுரைத்தவாறு
ஆங்காரங்கொண்டதோர் யனைத்தேர்ந்து
அறிவுருவசொரூபமென்று மாந்தர்நேர்மை
பாங்கானநாடிநாம் பானவாறு
பழமறைதானாராய்ந்து பாடிவைத்தேன்
நீங்காதகணபதியுங் கந்தன்றானும்
நிசமாகவந்துதவுங் காப்புத்தானே. ௧

தானானநாடிநரம் பானசெய்கை
தாரணியில்மானிடர்செய் தர்மகர்மம்
ஊனானவுடலுயிராய்த் தேகமான
வுரையறுந்துவுதித்துநின்ற ருண்மைக்கியானம
வானானநாடிவகைக் கெல்லாந்தன்னில்
வளம்பெறவேபொருநாடி மார்க்கங்கண்டு
தேனானகுருநாடி யாய்ந்துசொன்னேன்
மீதவிமுதல்சிவ னுடனே தெளிந்தகாப்பே. ௨

வேறு.

சீர்பெறுமுனிவர்வேதந் தெளிந்துபின் னுலகத்தோர்கள்
பேர்பெறுங்கருவிலுற்ற பிணிபலவுணர்ந்துதோய்ந்து
ஊர்பலநாடிக்கெல்லா முயர்பெருநாடிமூன்றில்
சேர்குருநாடிநேர்மை செயலுடன்கூறலுற்றேன். ௩

உற்றிடுநாடிமூன்றி லுயர்நிலைக்குருவைப்பற்றி
நற்றிடுநரம்பின்செய்கை நன்மனிதர்க்குப்போலே
பற்றிடுஞ்சுழிமுனைதாக்கிப் பதிபசுபாசத்[illegible]
மற்றுமுள்ளமண்டலங்கள் மூன்றையுமருவிநீளும். ௪

நீளுமேவாதபித்த சிலேற்பனமூன்றுமேவி
வாளுமைமையர்க்கைகோத்து வளர்ந்திடுங்குருவாநாடி
கோளுமேவிளைந்துநோய்கள் கூடழிவாகச்செய்யும்
நாளுமேநடத்துஞ்செய்கை நவிலுறேநாடிக்கேளே.
கேளெனச்சொன்னீரையா கிருபைவைத்தடியேன்கேட்கக்
கோளெனமருவிநிற்குஞ் சூட்சத்தைதொட்டுக்காட்டி
ஆளுமாநாடிக்கெல்லா மருள்பெறுங்குருவாநாடி
சூளுமேவகைதானன்றாய்ச் சொல்லீர்துலங்குவீரே. ௬

## வாததோற்றம்.

உற்றிடுமுலகத்தோர்க்கு வுறுபலவியாதியெல்லாம்
பற்றிடுங்குணங்கடன்னைப் பகர்ந்துரைசெய்யவேண்டில்
ஒத்திடுஞ்சனனவாறு முடலுயிரானவாறு
மத்திமாமலையில்வாழு மாமுனிவகுத்தார்தாமே. ௭

தானெனுநாடிபத்தில் தரித்திடுநாடிமூன்றில்
கோனெனுங்குருவாநாடி கருவினில்தரித்துவோங்கி
யூனெனுநிணமுநெய்யு முதிரமுஞ்சலமுமாகித்
தேனெனுந்தெளிவாயாடிச் செயலுடன்கூறலுற்றேன். ௮

துலக்கவேநாதன் தூண்டினைசுழினைகாட்டப்
பெலக்கவேயிடைதான்வாதம் பிங்கலைபித்தமாகும்
நலக்கவேசுழிதான்சேத்மம் நலமுடன்வலமேவாதம்
கலக்கிடுநதியேபித்த மையதுநீரதாமே. ௯

ஆமிந்தப்பூதங்கேளு மமர்ந்திடுவாதம்வாய்வு
ஓமிந்தப்பித்தந்தேய்வு வுற்றநல்லையந்தன்னில்
வாமிந்தவபானவாத மருவியபிராணன்பித்தம்
தாமிந்தச்சமானன்சேத்மஞ் சாற்றினேன்சாரந்தானே. ௰

சாற்றினேனிவர்கள்மூன்று லாக்கவுமழிக்கலரும்
தோற்றிடும்வாதத்தாதி சுருதியாய்க்கருவிக்கெல்லாம்
மாத்திரையாகத்தானே வாசல்காப்பதுவேயாகும்
தோற்றிடுதொழிலுக்கெல்லாஞ் சித்துடன்சத்துமாமே. ௰௧

## வாதபித்தம்.

ஆமிந்தநாடிதானு மறியெழுபத்தீராயிரம்
தாமதுள்நாடிபத்துச் சகலவாதாரமாகி
நாமிந்தநாடியேழாய் நற்றசைதோலெலும்பு
ஓமிந்தரத்தமூளை சுக்கிலமூன்றுமொன்றே. ௰௨

நாடிதானு முடலுயிருணர்வதாகி
தாம்வாதபித்தஞ் சிலேற்பனமூன் றுமொன்று
றைதேயுறுப்புத்தோறு முறுபின்னலாகிப்பின்னி
ன்றதேயிடைபிங்கலையாஞ் சுழிமுனைநடுவுமாமே. ௰௩

சுழிமுனைநடுவாய்நின்ற சிலேற்பனத்தொழிலைக்கேளு
வழிவழியாகப்பித்தஞ் சிலேற்பனநெருக்கும்போது
அழிவதுபித்தநீங்கி வாதத்தைநெருங்கிக்கொள்ளும்
பொழியவேவாதஞ்சென்று பிராணனைநெருங்கிக்கொள்ளும். ௰௪

தள்ளுமேவியானன்சென்று வேரிணையலைத்துமோதிப்
புள்ளுமேபழுத்துச்சாய்ந்தாற் போமதுசீவனங்கே
கொள்ளுமேமுன்செய்தர்ம கர்மத்துக்கீடாய்ச்சாகும்
தெள்ளுமேநாடிகூர்மை யின்னமும்புகலக்கேளே. ௰௫

வேறு.

ஒகழிந்தவுடலெடுக்கூந் குறிப்புச்சொல்வே
னுறுதியாங்தேகமுறி யுப்புதன்னை
வாகழிந்தமண்டலங்கள் மூன்றுக்குள்ளே
மருவிநிலை றபதிபசுவும் பாசமாகி
சூதழிந்தபிராணனொடு அபானங்கூடிச்
சுபமானசமானனுமாய் மூன்றுபேரும்
நாகழிந்தவிதங்களிலே யெடுத்துவாக்கை
நயசுகமுந்துக்கமுட னெடுத்தசென்மம். ௰௬

சென்மமதுசெனித்தவுடன் முப்பாவந்தான்
தீவினைக்குமீடாகிச் சென்மமாகிக்
கன்மமென்றுந்தர்மமென்றுங் கருவிப்புக்கிக்
கலந்துநின்றவன்னியொடு காலுநீரும்
ன்மமெனுவாதபித்த சிலேற்பனமாகி
யூடுருவிப்பிராணனோ டபானன்றனும்
தன்மமெனுஞ்சமானனுமாய் மூன்றுபேருந்
தாரணியில்பானனுமாயானுமாச்சே. ௰௫

அச்சுதேயபானனது வாய்வுமாச்சு
அதன்மேலேபித்தமது கண்ணேயாகி
வாச்சுதேசிலேத்மமது சுபநீராகி
வகைமூன்றுவாழ்ந்தங்கே தொந்தமாகி
எச்சுலேபலபிணியும் பிரளிகளை கபநீர்
எழுந்தபலனேயாகி யீடுமாகி

நாச்சுநாலாயிரத்து நானூற்றுசொச்சம்
நவிலக்குணம்புவியோர்க்கு நாட்டினாரே. ய

நாட்டினார்வாதத்தி லெழுந்தரோகம்
நலமுடையவாதமொடு வாய்வுகுணம்
கூட்டியேயுதிரத்தி லண்டவாய்வு
குடல்சடலவாயவுபுக் கெழுந்துசுற்றம்
காட்டினார்விஷகடிகள் திமிருருட்சை
காதடைப்புப்புற்றுவகை கிராணிதோஷம்
முட்டினார்கெர்ப்பத்தைக் கெடுத்தவாய்வு
மூன்றுவகைவிபரமறிந்தவன் வயித்தியனாமே. யசு

ஆற்றவாதபித்தம் சேத்மதொந்த
மதனவிபரவகைதெரிந்து நோய்க்குணமறிந்து
கோதற்றவாதிமகன் வயித்தியமேசெய்யில்
கூறுகண்டுசெந்தூரங் சளங்குபற்பம்
தேதற்றதிராவகங்கள் செயநீர்செய்வான்
திறமுடனேநோய்தீர்த்துத் தொந்தஞ்செய்வான்
தாறுற்றபித்தத்தா லெழுந்தரோகஞ்
சாற்றுகிறேன்கருவரிந்து சார்ந்துபாரே. உய

## கபத்தினால்பிறக்கும் விபரம்.

பாரிந்தபித்தத்தா லெழுந்தரோகம்
பதமுடையகணையாலே யெலும்பைச்சார்ந்து
நேரிந்தசிரைச்சூலை சோகைபாண்டு
நெற்றியின்கண்ணோயை நெடும்பாடோட
சரிந்தகிறுகிறுப்பு வுழலைதாகம்
கிராணியொடுபிரமேகம் கிருமிதோஷம்
சாரிந்தவுள்ளோகம் வெட்டைசூடு
சலக்கடுப்புமுளைமூலம் பவுத்திரமுந்தானே. உக

தானென்றகபத்தாலே யெழுந்தரோகஞ்
சாற்றக்கேள்சிலேத்மமென்னுந் தொண்ணூற்றாறும்
தேமென்றவிருமலொடு ஈளைகாசும்
சிரரோகங்கிரணிகங்கள் மண்டைரோகஞ்சூலை
ஊனென்றவாய்வலிப்பு மூக்குநீர்கள்
உற்றசயங்கண்ணினீர் புல்லங்காசம்
வானென்றமண்டையினோ யனேகமுண்டு
வகைவிபரம்மூன்றும் வகுத்ததாமே.

## வாதபித்தசிலேத்பனம்.

வகுத்ததொருவாதத்திற் பித்தங்கூடில்
வாயுவொருசிரச்சூலை வழக்கமாகும்
மிகுத்ததொருபித்தத்தில் சேர்ந்தவாய்வு
வேகமுள்ளசலக்கழிச்ச லிரைச்சல்வாய்வு
எருத்தமிகுவாதமொடு காந்தல்குத்து
இளம்பிள்ளைவாதமொடு காந்தல்குத்து
சைத்தியமுமிருமல்சயஞ்சன்னிவாதம்
தலைதனிலேபலதோஷஞ்சாருந்தானே. உ௩

தானென்றவாதபித்த சிலேத்பனந்தான்
தலங்களிலேதொந்தித்தால் கூறுகண்டு
வானென்றமூவரினுற் றெழுந்தமேறி
வருங்குணத்தையாய்ந்துணர்ந்து மனதிற்கண்டு
பானென்றவவிழ்தத்தின் பதங்கள்கண்டு
பார்ப்பவனேவயித்தியனும் பாருபாரு
தேனென்றநாடிகண்டு குணமுங்கண்டு
தெளிந்துணர்ந்துசெய்கைகண்டு செய்துபாரே. உ௪

பார்க்கையிலேபிணியதனை யறியாவிட்டால்
பரிவானமருந்தினுக்குப் பிணிதான்றீரும்
நோக்கையிற்பிணியதனை யறியாவிட்டால்
நோய்தீரமாட்டாது மருந்தேறாது
தாக்கையிலேகுருவினிட மனதுநொந்தால்
சண்டாளனுகியவன் தவறிப்போவான்
சேர்க்கையிலேகுருவுக்கு மனந்தான்மிக்க
செய்தவனேவயித்தியனுந் தெளிந்துபாரே. உரு

பார்க்கையிலேசெனனமெடுத் தாக்கையாலென்
பதியவர்முன்செய்த தர்மகர்மம்
ஏற்கையிலேபெண்ணொடு புருஷன்சேரி
விக்காயநிலைக்குத்தன்றே புரியட்டகத்தூடு
காக்கையிலேயிடகலைக்குச் சோடசமேபாயுங்
கருவானபின்தலைக்குப் பன்னிரண்டாம்
தீர்க்கையிலேயிடகலைக்குச் சோடசமேபாயுந்
திறமுடனேயுடலுயிரா முறுதியாமே. உ௬

ஆமிதுவேசுக்கிலமே பெருத்தானல்
ஆணுதமதுகுறைந்து சுரோணிதந்தான்மீறில்

ஓமிதுவேபெண்ணாகு மிறுதியாக
ஓகோகோமுன்செய்த கன்மத்தாலே
பூமிதுவேம்நாய்களெல்லாம் பூண்டுகொண்டு
புகுர்ந்து[illegible]ந்துபிறப்பிறப்புபூணுங்காயம்
நாமிதுவேகருக்குருவு முவர்ந்தநேர்மை
நாடறியவெல்லார்க்கும் நவின்றவாறே. உஎ

வாறுகேள்மடலான செய்கைதானும்
வகைவிபரமுன்செய்த கன்மத்தாலே
கூறுடனேயெறிகலையாற் கிருமியாலும்
கொஞ்சியதுவாயுவுடன் கலைத்திரவிமீறி
வீறுடனேவெட்டையினாற் பசியினாலும்
வேறுடனேகெர்ப்பமது வழிந்துபோகும்
வாறுடனேமடலாகுங் கர்மத்தாலே
வந்தவகையிதுவென்ன வகுத்தார்தாமே. உஅ

தானங்கேசுக்கிலந்தானறுகுநுனிப்பனிபோல்
தங்கியதுபதினைந்தில் பலத்துக்காணும்
ஏனங்கேயிருபத்தைந்தாநாளி
லியல்புடனேர்திங்கள்தனிற் றலையுண்டாகும்
வானங்கோண்டுதிங்க ளிற்றுமுடிவாகும்
வளர்மூன்றுதிங்கள்கைகாலுண்டாகும்
வேனங்கேயைந்தாறில் விரல்நகங்கள்தோன்றும்
வேதாந்தம்பிண்டம்வளர் விபரமதுதானே. உகூ

தானேதானன்னையுண்ட வன்னமுந்தண்ணீருஞ்
சாந்தமாய்த்தொப்புள்கொடி யூடேபுக்கி
பானரசவமுதமெனச் சேயுந்தோற்றும்
பாங்குடனேழாமாதங் குடலுதிரஞ்சேரும்
மானேகேளிந்தவகை வளர்த்தியான
வகைவிபரநன்றாக மானிடர்க்கு
வானவர்கள்முனிதேவர் கிருபையாலே
மதலையுருவானவகை மாதஞ்சேரே. ௩0

வேறு.

சேருமேயெட்டாமாதக் திறமுடன்சிறந்துமோதி
ஊருமேயுன்பதனை லுள்ளறிவுவுண்டாமப்பால்
காருமேயொன்பதாணற் கருணையாம்பத்தில்நாடும்
தோருமேபத்தாமாதம் பூமியிற்றொழுதுவீழும்

...ழுதுடன்வீழ்ந்தபோது தத்துவந்தொண்ணூற்றாறு
...ழுதுடன்யாக்கையாகி முற்றுமேநரம்புநாடி
பழுவுறுதசையெலும்புத் தாதுவும்பதிவாயொத்து
கொளுமதுதேகந்தன்னிற் கூறுநானுரைக்கக்கேளே. ௩௨

## நாடிநிலையறிய.

தோட்டிடுநாடிதானு மிருநூற்றுநாற்பத்தைந்தில்
நாட்டிடுநாடிபத்து நயம்பெறுமேழுதானு
மூட்டிடுபெஞ்சநாடி முற்றுமேபார்க்கும்போது
சாட்டிடுநாடிதானு மூன்றெனச்சாற்றலாமே. ௩௩

சாற்றுறேனிடையேவாதம் பிங்கலைபித்தமாகும்
தேற்றுறேன்சுழினைதானுஞ் சிலேத்பனமென்னலாகும்
மாற்றுறேன்வலமேவாதம் வளர்ந்திடும்பித்தந்தீயாம்
போற்றுறேனயந்தண்ணீர் பொருந்திடும்பானவாதம். ௩௪

வாதமென்றுரைத்தபின்பு மருவியபிராணன்பித்தம்
தாதமென்றுரைத்தசிலேத்பனஞ் சமானனுநோயதாகும்
போதமென்றவர்கள்மூன்று லாக்கவுமழிக்கலாகும்
வேதமென்றுரைத்தசெம்மை விளம்பினேன்புவியில்மாதே. ௩௫

மாதவர்முனிவர்தேவர் வளர்ந்திடும்வானத்தோர்கள்
வேதவர்பத்தர்சித்த ரிருடிகண்மேல்நோய்சாராது
பாதகர்பிறவியெல்லா நோய்தணிந்தழுக்கிமாள்வார்
காதலால்யோனியாசைத் தீமையாலிறப்பர்தாமே. ௩௬

தாமதுசுவைகளாகுந் தருக்கியபோகத்தாலும்
போமதுபிறந்திருந்து புகுந்திடுநோய்க்கூட்டுள்ளே
சோமதுகாமத்தாலே செனித்திடும்பிண்டஜென்மம்
...துவறியச்சொன்னேன் நாடிநீதெளிந்துதேரே. ௩௭

தேறுவீர்சற்பங்கொண்டு சிதம்பரபூசைசெய்து
வாறுநீசத்திபூசை வைரவன்வீரவாகு
சேருநீகணேசன்கந்தன் சிறப்புடனிவர்கள்பூசை
வேறுகேளுநாத்தமுன்னூ லாய்ந்துமேசெய்யநன்றே. ௩௮

## ௪௪௪௮ வியாதிதொகுப்புப்பெயர்கள்.

நன்றெனவியாதிதானு நவிலுறேனுகமத்தில்
குன்றெனவளர்த்தநோய்கள் சகலமுந்தொகையாய்ச்சொல்வேன்
அன்றெனவெழுந்தநாடி யெழுபத்தீராயிரந்தான்
...நாடிபத்துக் கருத்திறுமேழுகாது

தாதுவேபஞ்சபூத மதிலுறுநாடிமூன்று
கோதறுகுருவாநாடி குறிப்புடன்மேவிநின்று
தாதுறுசத்தத்தாது தசைநாம்பெலும்புதானும்
வேதுறுரோமமச்சை சுக்கிலநெய்பாம்பித்தம். ௪௦

பித்தநாற்பத்துநான்கு பெருவயிறெட்டதாகும்
உற்றதோர்பீலியெட்டு மோசியுமூன்றதாகு
மெத்தவெசிலேற்பனந்தான் மிகுத்திடுந்தொண்ணூற்ருரு
மற்றுமேவாதரோகம் வகையுமெண்பத்துநாலே. ௪௧

சன்னியும்பதினெட்டாகுந் தாள்வலிநேத்திரந்தான்
உன்னியதொண்ணூற்ருரு முழுவையுமூன்றதாகு
மின்னியபக்கசூலை மேவிடுமேழதாகும்
சென்னியில்வீக்கந்தானுஞ் சேர்ந்திடுமைந்துதானே. ௪௨

பிளவையில்சிலந்திதானும் பெருத்துடனைம்பதாகும்
அளவிலாச்சுரமேகேளு மறுபத்துநாலதாகும்
களமிகப்படுத்தும்பாண்டு தானுமேயஞ்சதாகும்
இளகியகுன்மமெட்டு மேந்தியவிக்கலாமே. ௪௩

இந்திரகோபதோஷ மிருபதுமெழுபத்தாறும்
அந்திரவாயுசங்கை யாயிரத்தெட்டேயாகும்
தந்திரப்பார்வைதோஷந் தானுமேநூறதாகும்
மந்திரக்குமிழியெட்டு மகோதரமீரெட்டாமே. ௪௪

படுவன்முப்பத்திரண்டு பருவொருநாற்பத்தொன்று
முடுகிடும்விஷபமாறு முற்றுமேமவுசிமூன்றுந்
திடுகிடும்பீலிமூன்று சிரசினிற்கிலந்திசொல்வில்
கடுகிடுமைம்பத்தாறு கரப்பானுமெண்பத்தைந்தே. ௪௫

திருக்குநோயெண்பதாகும் திரளும்விப்புருதிபத்தாம்
மறுக்கவேகிராணிதோஷ மற்றுமேயிருபத்தொன்று
மிருக்கிடும்பிளவைதானு மேழெனுமிவைபேசொல்வில்
கருக்கிந்ததோஷந்தானுங் காணுமேநாற்பத்தாறே. ௪௬

குட்டமும்பதினெட்டாகுங் குறைநோவுமெட்டதாகும்
திட்டமாஞ்சூலையெட்டுச் சித்தியலாறதாகுந்
தட்டுநீரிழிவுசொன்னேன் தானுமேயிருபத்தொன்றும்
திட்டமாமவிஷபமைந்துஞ் சேருங்காமாலையாறே. ௪௭

மிருபத்தொன்று மிகுயோனிச்சூலையெட்டுந்
மூமாறதாகுந் தனிரத்தபித்தமூன்றுஞ்
ாகையுமூன்றதாகுஞ் சூசிகாவாய்வுபத்தும்
ஆகத்தில்வீக்கமொன்பா னரையாப்புமூன்றதாமே. ௪௮

ஆனதோர்நரம்புரோக மாயிரத்தொருநூறென்னும்
ஈனமாங்குதிரந்தானு மிருபதுபன்னிரண்டு
தானமாந்தண்டில்ரோகந் தானொருமூன்றதாகும்
கானமாங்குழலினாளே கசரோகமூன்றதாமே. ௪௯

எலும்பினிற்பத்துரோக மீறொன்பதென்றுசொல்லுங்
கலங்குமேபெருவயிற்றில் கலந்திடுநூறெட்டென்னுங்
குலுங்குமேமலைநோக்காடு குறித்திடுமைம்பத்தொன்பான்
நலங்குசேர்தலையின்மூளை நாற்பதுரோகந்தானே. ௫௰

முற்றுமேயுதரரோக நூற்றெட்டுநாற்பத்தென்னும்
பற்றியநாக்கில்ரோகம் பன்னிரண்டாகுமென்னச்
சுற்றியகண்டமாலை சொல்லிபவெட்டதாகும்
மற்றுமாநேத்திரரோக மைந்துடநாலதாமே. ௫௧

காதினில்வியாதிதானுங் கருதிடுமிருபத்தெட்டும்
மார்பினிநோயைந்தாகு மற்றொருநாலதாகும்
மாதியாநெற்றிரோக மஞ்சனுமோரிரண்டு
சோதியேயுதிரமண்டெலி சொற்படிரெண்டதாமே. ௫௨

புண்ணினிற்கன்னியைந்து பொருந்தியவாழ்நீரைந்து
நண்ணியநாசிரோக நாலதுமூன்றுமென்னத்
திண்ணியவாதமெட்டுஞ் சிரங்கணநாலதாகும்
பண்ணியரோகஞ்சூழ்ந்து பாரிக்கும்வாறதாமே. ௫௩

காயாச்சுவாசமைந்து கதித்திடும்பவுத்திரமெட்டு
மாயமாய்வெள்ளோக்காளம் வந்திடும்ரோகமைந்து
சாயங்குட்டச்சிலந்தி தானொருமூன்றதாகும்
மாயமாமுனிவன்சொன்ன மூலமுமாறதாமே. ௫௪

தேகத்தில்கழிச்சலைந்து திகழ்முலைகுத்துநாவும்
வகுத்தினில்புழுவேகேளு வளர்ந்திடுமிருபதென்ன
மெகத்திடுமூச்சுவாத மெய்பமேநாலாமென்ன
பகைத்திடுபதமிரண்டு பாய்ந்தபீநசமுநாலே. ௫௫

மூத்திரக்கழிச்சல்நாலு மூர்ந்துநீரடைப்புநாலு
மாத்திரைப்பாதசக்கரம் வந்திடுநாலாமென்னச்

சாத்திரப்படியேசொன்னேன் தந்தத்தில்வாயுவெட்டு
சூத்திரப்படியேயண்ட வாயுவுமேழதாமே. ௫௬

மாந்தமுமெட்டதாகு மயக்கிடுமூர்ச்சையாறு
சேர்த்திடுபிள்ளைதோஷஞ் செப்பிடிலநூற்றெட்டாகும்
வார்ந்திடுமடந்தாய்வாத சுரோணிதமேழதாகும்
தாழ்ந்திடுங்கன்னரோகந் தானொருவைந்தேயாகும். ௫௭

அட்டையின்கடியின்மூன்று மாணையின்கடிகள்மூன்று
நட்டுவக்காலிரண்டு நல்லதோர்விஷமுநாலு
தட்டிடுஞ்செந்நாய்தானுந் தாக்கிடும்விஷமுமைந்து
மிஷ்டமாமெலிவிஷங்க ளீரொன்பதென்றுசொல்லும். ௫௮

வேறு.

கேளாக்கடிவிஷமுமூன்று சேர்ந்தமானுய்விஷமுமஞ்சு
நாலாய்நரிகடியொன்றாகு நலமாங்கருவாய்விஷமூன்று
கேளாயெறும்புவிஷமைந்து பெருவாரக்கடிமூன்று
தேளாஞ்சுந்தரிவிஷமூன்று திரித்தபுலிவிஷமைந்தாமே. ௫௯

வேறு.

எரிபுலிகடிபேயெட்டு ஏனத்தின்விஷமிரண்டு
கரியநீர்க்காடிதானுங் கடித்திடுவிஷமிரண்டு
பரிவுள்ளகுரங்குமந்திப் பலகடிவிஷமுமூன்று
விரிவுள்ளசிறுபாம்புதானு மேவியேவிஷமுமூன்றே. ௬௰

பூனையின்கடிகள்ரண்டு பேய்நரிவிஷமிரண்டு
சேனையிலுயுத்தஞ்செய்து தெரித்திடுங்குண்டுங்காயம்
மானையேவென்றகண்ணாய் வல்லயக்குத்துக்காயம்
மீனையேதேளியொன்று விலாங்கதுமொன்றதாமே. ௬௧

பீரங்கிக்குண்டுக்காயம் பெரியதோர்குத்துக்காயம்
கூரம்புபட்டகாயங் குலைப்படுவெட்டுக்காயம்
பாரங்கந்தன்னிற்சென்று பறைபெறக்குடலைப்பீறி
சூரங்கள்பண்ணிப்பீறிச் சூரியால்வகுத்தகாயம். ௬௨

இப்படிமுசல்வலிப்பு எழில்மூன்றும்வகையாய்ச்சொன்னேன்
சொற்படிகழித்துசெய்யி லதுவகைநாலாயிரந்தா
ஒப்படிநாடிதானுங் குணங்களும்வருகும்வாறுஞ்
செப்படிரண்டுங்கொள்ளத் திருவுளமருளிச்செய்தார். ௬௩

நாடிதானியம்பக்கேளீர் நயமுடன்றிந்துநீயும்
வாடியமண்ணுள்ளோர்க்கு வரும்வினைவியாதியாகித்

டியவியாதிதானுங் கதித்திடுங்கடினஞ்செய்யும்
டயவுலகோர்செய்கை தொகுத்துநானுரைக்கிறேனே. சுச

உற்றதோருடலிற்கூறி வுறுப்புடன்விரலினின்று
முற்றுமேநோய்களெல்லா முதிபெறத்தோன்றும்போது
பற்றுமேவாதபித்த சிலேற்பனந்தன்னிலொன்றை
பற்றியேதோன்றுமென்று பகர்ந்தனர்முனிவர்தானே. சுரு

குருநாடி.

கூறுவார்வேதந்தான் குருநாடிநேர்மையெல்லாம்
வீறுசெய்யுடலில்வாத பித்தமேசிலேற்பனமூன்று
வாறுகண்டறியும்வண்ணம் வழுவாதநாடியொன்று
பேறுகொண்டெழுந்தநேர்மை பிரித்துடனுரைத்தார்மேலோர். சுசு

ஓருயிரைசசேர்ந்துவுட லிடைவம்பைத்தோற்றி
ஓரெழுபத்தீராயிரநாடியே யிசைந்துபின்னுங்
கார்செறிமேகம்போலே கதித்திடும்வியாதியெல்லாம்
பேருகொண்டெழுந்தநேர்மை பிரிதியாய்க்கேழ்க்கின்றேனே. சுஎ

கேட்பதோர்வசனந்தன்னைக் கிருபைவைத்தடியார்க்கின்னம்
தாப்புரவகைகட்கெல்லாந் தனித்தனிகுணம்வெவ்வேறு
கூர்ப்புறவின்னதென்று குருவருள்செய்யவேண்டும்
ஆர்ப்பனதெளிந்துநன்று யருள்செய்வீரமரர்கோவே. சுஅ

வேறு.

நண்ணுவதோர்பிணிகள்வந்தவகைதானேது
நாடிசைந்திருந்தவிதம் நடுத்தானேது
அணுகியிருந்தெழுந்துவரும்வகைதானேது
ஆகவொருமுடிப்பிருந்ததலந்தானேது
பணிதியெடுவேரிருக்கபதிதானேது
பார்வைகுருடானபின்புவிருள்தானேது
தணியுடனேபொருளிதனைக்குறித்துச்சொல்வீர்
சண்டாளப்பிணிகள்வந்தலத்தைக்கூறே. சுகூ

நணுகியதோர்பிணிகள்வந்தவகையேதென்னில்
நாடிவெகுபுசிப்பருந்தல்நபத்தினாலே
சிணுகுபெருந்தாபமுறும்பிணிகள்மீறுந்
தீனகித்துதின்பீராயில்பிணியோயில்லை
நொணுகுடனேஸ்திரீபோகஞ்செய்வீராகில்
கொடியபிணிமிகுதிவருங்குலறையுந்தந்து

வணிவறிந்துபொசிப்பருந்திப்போகஞ்செய்தால்
வல்பிணிகளவரிடத்தில்வாராதென்றே

நாடியிருந்தசைந்தவிடந்தசைநீர்கூடி
நாட்டமிடைபின்கலையுஞ் சுழினையும்பற்றி
தேடுபுனற்றீயோடுகாற்றுங்கூடிச்
சேர்பித்தவாதமெனச்சேருமூவர்
ஆடியதோர்மாலயனுமாகுமப்படியே
வாதபித்தசிலேற்பனமூம்நேர்மையாடும்
ஓடிவருங்கரங்கடன்னிலுறுதியாக
வுற்றுநிற்குநாடியொன்றுகந்துபாறே. எக

மூலமுதலாதாரமாறுஞ்சுற்றி
மூர்த்திநின்றபரவெளியில்தன்மையாகி
பாலமிதுமீதேறிச்சுழினையூதி
பாதாளநாடியங்கிபதியும்வேறு
காலமது வரும்போதுகவரும்வீசம்
கத்திரிக்காய்போன்றிருக்குங்காலைப்பற்றி
சீலமுடனெடுக்கும்வருங்காலந்தன்னில்
தெசவாயுபாரித்து அலைக்கும்வேரை. எஉ

அய்யாறுமாறுமங்கேயசைந்துபேர்ந்து
அண்டபகிரண்டமெல்லா மதிர்ந்துசாய்ந்து
மெய்யாறுதட்டுமங்கே யிடிந்துவீழும்
வேரிளகிப்போம்போதுபிராணன்போகும்
பய்யாறும்பரவெளியுமிரண்டுபோகும்
பரமனாங்கிருந்துபகரும்போது
வெய்யேறுபுரவியும்போமிருளுமாளும்
வேரிழந்தவகையிதென்றுவிளம்பலாமே. எங

விளம்பலாம்வேரிருந்ததளத்தினூடே
மேவிநின்றபரவெளியிற்சமானமாகத்
தளம்பறவேகட்டிவைத்தமுடிப்புமங்கே
சற்குருவின்வைப்பெடுத்ததலமுமங்கே
வளம்பெறவேவேரிருந்தவிடத்தைக்கண்டால்
மன்னுகுருபரனருளே மருவுங்காலம்
மளம்பாசபசுபதியுமொன்றுங்காலம்
மார்க்கண்டநாதனென்றுவகுக்கலாமே. எச

வேறு.

...புறேன்விபரமாக வினவியகிரந்தத்தாலே
...ம்பெறுமுப்பாவத்தால் மருவியபிணிகள்மீறும்
...ளம்பியமனத்தார்சிந்தை உயர்பெறும்பெரியோர்தன்மை
...ளம்பெறுநிந்தைசொன்னுற் சார்ந்திடும்பிணிகடானே. எ௫

குருவருள்விளம்பச்சென்று குவலயத்துள்ளமாந்தர்
திருவுளமனதிற்கற்றுத் திருத்தியேவேண்டிக்கொண்டு
கருவினையறியாமூடர் கற்றோரைத்தூஷணித்தல்
குருவினைநிந்தைசொல்லக் கொடும்பிணியாலேமாள்வாய். எ௬

கற்றதோர்வித்தைபோச்சு கருத்ததுமயங்கிப்பின்னும்
உற்றதோர்வறுமையாகி யுலகுளோர்நகைத்துப்பேசி
பித்தமுப்பிரமைகொண்டு பேருலகந்தனிற்சென்று
சித்தமுங்தெளிவுமாறித் தெருவினிற்கிடப்பர்தானே. எஎ

குருவினைவணக்கஞ்செய்து கோணுமற்பொருளையீந்து
இருவினையறுக்கவேண்டி யென்குருதெய்வமென்று
ஒருவனுங்குருவையெண்ணி யுற்றனகொள்ளும்போது
அருவினைகன்றுநீங்கி யமருலகடைவர்தானே. எஅ

என்றதோர்சொல்லைக்கேட்டு மின்னமுமிபம்பவேண்டும்
நன்றுதானடியேனென்று நவிலுலகுள்ளோர்க்கெல்லாங்
குன்றுபோலெழுந்தரேகன் குலைந்திடவகைதான்சொல்வீர்
கன்றுதான்பசுவைத்தேடிக் கருதிடுமார்க்கஞ்சொல்லே. எ௯

வேறு.

நாடியென்றால்தசநாடிபத்துண்டாகும்
நலமுடனேஓர்விரலுக் கைந்துகாணும்
கூடியங்கேகைவிரலுங்குவிந்துநிற்கும்
குறிப்பறிவீரொருநாடி குசல்களெல்லாம்
ஆடிநிற்கும்விரலைந்து ஒன்றுக்குள்ளே
அதனுடையசூட்சநிலை வாதவீட்டில்
சாடிநிற்குமூவிரலு முருவிப்பாய்ந்து
சாதகமாகிற்குநிலை தன்னைப்பாரே. அ௦

மூலமுதலாதாரமாறுஞ்சுற்றி
மூர்த்திநின்றபரவெளியில்முனையினூடே
பாலமெனுமீதேறிச்சுழினைபற்றிப்
பதிந்துநிற்குங்கத்தரிக்காய்மாறல்போல

சிலமுடன்தசநாடிப்பத்துமொன்றாய்ச்
சேர்ந்துநிற்கும்நாடிநிலைதேர்ந்துபார்க்கின்
ஞாலமதிலின்னதென்றறியலாகும்
நாதாந்தகுருவருளைநாடிப்பாரே. ௮௧

அணுகிவரும்பிணியேதென்றறியவேண்டி
லாதாரமென்றதொரு சிரசில்வேரு
பணுகியேயீரலிட வகுப்புகன்னில்
பற்றியதோர்வேரதினால் பதியும்நோய்கள்
மணுகியேமூலமதிற்குடலிற்பற்றி
மருவியதோர்வேவுகொண்டால் பிணிதான்மீறும்
நணுகியதோர்வாதபித்த சிலேற்பனத்தாலே
நன்றகுணமிம்மூன்றால் நாடுங்காணே. ௨

தண்ணீரால்நெருப்பதனாற் கனத்தினாலுஞ்
சார்ந்தபிணியின்னதென நம்பிப்பார்க்க
உண்ணீராலமுதநிலை தன்னைச்சார்ந்து
யுற்றநிற்குஞ்சிலேற்பனந்தானுறுதியாக
இண்ணீராற்கூர்மமென்றசரல்தன்னில்
இசைந்துநிற்கும்பித்தத்தின் சுரங்கள்சூலை
பண்ணீரால்மூலமென்றகுதத்தைப்பற்றிப்
பரவியேநிற்குமது வரவுமாமே. ௮௩

ஆதாரமாறுக்கும் நடுவேநின்ற
வப்பற்றிஅலம்புருடநாடியங்கேயசைய
கேதாரமூலத்தேயிருந்தநாதங்
கிளர்ந்துமெள்ளவூடுருவிமேலேசென்று
பாதாரவிந்தமங்கே சுழினைதாக்கிப்
பற்றிநின்றதசவாயுமொன்றாய்ச்சேர்ந்து
சூதானவீடுதான் தன்னிற்சென்று
சூட்சநிலைநின்றவிட முடிச்சதாமே. ௮௪

முடிச்சென்றநரம்பெல்லாம் பிடரிற்சுற்றி
மும்மண்டலங்களுக்கு முதலாய்நின்று
துடிச்சவகைபிராணனோ டபானன்றானுந்
தோன்றிடுமேலாதார மாறுஞ்சுற்றி
வடிச்சிநின்றவாய்வங்கே யபானன்பற்றி
மார்க்கமதுபலவிதமா யலைக்கும்வேரை

தடுத்திருந்தபிராணனங்கேயேகுமென்று
சாற்றினூர்மறைமுனிவர் தாணியோர்க்கே. அரு

வாதமிருந்தெழுந்துவரும் வகைதானேது
வரிசையுடன்தாதுநிலே வகைதானேது
பேதமுடன்பயித்தியங்கள்பிறந்தவேது
பிரமேகம்நீர்க்கடுப்புப்பொருள் தானேது
தாதுவுருஞ்சயித்தியங்கள் பிறந்ததேது
சாதுரியமகாதோஷம் வாய்த்ததேது
ஓதிவெகுசாத்திரங்கள் படிக்கும்பேரை
யுறுதியுடன்பொருளிதென் றுரைதான்சொல்லே. அசு

வாதபித்தத்துக்கு விபரம்.

வன்னியொடுகாலகுடிமண்ணேச்சார்ந்தால்
வாதமிகுமண்மிசையில் வாயுமீறும்
தின்னமுடன்வானதிலே காற்றுந்தீயும்
சேர்ந்திடுமேல்பித்தமிகுஞ் சீரைப்பாரு
உன்னிடெழுசிலேற்பனர்தான்தண்ணீர்காற்று
உறுதியுடன்சுழிமுனேயிலுற்றுவாங்கும்
சென்னியருள்புகழ்படைத்த முனிவன்சொன்ன
சித்தாந்தமதுரகவிதெளிந்துகொள்ளே. அஎ

வேறு.

சுழினையும்பிராணன்தானுஞ சுழன்றுதான்கலேயைச்சாரில்
நளினமாந்தாதுவிட்டு நற்கயிருகவீசும்
கொளுமுனேபோலேகம்ப மெழுகடலுச்சியேறில்
சுழுனேயாந்தாதுநின்ற மார்க்கமென்றறிந்திட்டாயே. அஅ

இருகரங்கால்பெருத்து வுருப்புகள்தன்னிற்சேர்ந்து
பருவமம்பிராணவாயு பற்றியேயிடைபுங்கூடிக்
குருவெனப்பணிந்துபாணி தன்னேயுமேக்கொண்டேதான்
மருவியசிலேற்பனசீதம் வருமெனவகுக்கலாமே. அகூ

அக்கியவுள்ளநாடி யபானனேடொத்துவாங்கில்
புக்கியமலசலாதி போக்கியமாகநின்று
வெக்கியமந்தர்தானு மிருந்திடுபசியினுலும்
அக்கினியெழுந்தபித்தம் வளர்ந்திடும்வகையிதாமே. கூ0

## சன்னிப்பிரக்கும் விபரம்.

### வேறு.

சன்னியிருந்தெழுந்துவருந்தலந்தானேது
தாதுவிழுந்தெழுந்திருந்ததன்மையேது
உன்னியொருசுரமிருந்தவகைதானேது
உட்காசசல்பிரமேகவுகமையேது
பொன்னியொருபருப்பிளவைபுடைத்ததேது
புரையிருந்துசலமிருந்தபொருள்தானேது
இன்னதெனப்பண்டிதரேவகைதாணுய்ந்து
இயம்புவீரிப்பொருளையியம்புவீரே. ௬௧

சன்னியிருந்தெழுந்தவகைவிபரமென்னில்
சாரமுடன்சிங்குவைதான்மூலஞ்சேரில்
வன்னியொடுதண்ணீரும்வாயுங்கூடி
வழுதசிங்குவையோடொத்துச்சார்ந்து
பின்னியெழுந்தடுவதுதான்சன்னியாகும்
பிரிவுடனேகாந்தாரிசுழுனைபற்றித்
தன்னிலதுதணலெழும்பித்தாதுவிழுஞ்
சடத்துக்குப்பலங்குறையுந்தாதுதானே. ௬௨

ஏற்றமுள்ளவிடைநாடிகலையுஞ்சேர்ந்து
ஈடானவிஷநரம்புதன்னைச்சாரில்
வார்த்தவுடன்மாங்கிஷத்தில்வேவுகண்டு
வகையானவிஷநரம்புமடங்கும்போது
சித்தமுடன்பவுப்பிளப்பையுடைத்துப்போகும்
திறமானவிஷநரம்பில்தமருமுண்டாய்
சாத்தமுடல்சியும்ரத்தஞ்சலமுமேவுஞ்
சங்கையில்லாவெகுவாறுசலமும்போமே. ௬௩

### சூலைவருங்குறி.

நாடியிருந்திருந்தவிதநீர்கூடி
நாட்டமிடைபிங்கலையுஞ்சுழுனையும்பற்றித்
தேடியதோர்புனற்றீயுங்காற்றுங்கூடிச்
சேர்பித்தவாதமென்றுசேருமூவா
ஆடியதோர்மாலயனுமரணமாகு
மப்படியேவாதபித்தசிலேற்பனநேர்மை
ஓடிவருங்கடமென்னிலுறுதியாக
உற்றுநிற்குநாடியொன்றுவகந்துபாரே. ௬௪

### சயரோகம்.

மாயமாய்ச்சயரோகம்வரும்வாறேது
மாற்றுமொருமீசனங்கள்வகைதானேது

வியனுசச்சூலேயிருந் தெழுந்தபோது
வீறடனேநீசச்செழிப்புவிதனைமேது
பயமாகக்கனவுநினை வுத்ததேது
பார்த்திருக்கக்குணமெழுந்தபகைதானேது
நயமாகப்பொருளதெண்ணும்வகைதானேது
நன்மையுடன்பண்டிதரேநடுவதனைச்சொல்லே. ௬௫

சயரோகமெழுக்தவகை சொல்லக்கேளீர்
தலைதனிலேகனலெழும்பிநீர்தான்சுற்றி
மயமாகவிரிபுறமுந்தமருண்டாகி
மதுரமென்னுருசியறிந்துவாய்நீருன்றிச்
சுயமாகமண்டையில்நீரிறங்கிச்
சுவாசமதுநெஞ்சில்வந்துகதறியேங்கும்
நயமறியச்சயரோகம்நடுங்குங்காலே
நன்மையுடன்பண்டிதரேநாடிப்பாரே. ௬௬

பீனசந்தான்வரலாறுபொருளேதென்னில்
பேதமுற்றகனலெழுந்துவாயுசேர்ந்து
ஊனுருவிமண்டையிலேடொக்குபட்டு
உற்றுதியுடன்வாயுவங்கேயொத்துப்பின்னும்
பீனமுடன்நெருநீருஞ்சியுப்ரத்தம்
பிடித்துவருங்காற்றோடுமூக்கினோடு
காணுருவிவந்ததுபோல்சலங்கலங்கிக்
காய்விழுப்பீனசத்தின்செய்கைதானே. ௬௭

சூலை.

சூலைவரும்வாறதனைச்சொல்லக்கேளுஞ்
சுற்றியதோர்விசைநரம்பில்வேவுகண்டு
காலையுமேயூடுருவித்தமர்தான்விப்மிக்
களிப்பதுபோலம்மாசுற்றயிரத்தப்வற்றி
மாலையதுபோல்தொடுத்துநாம்பின்மீதே
வகையானவிசைநரம்பைமடக்கிக்கொள்ளும்
கோலைவிட்டகுருடரைப்போல்தட்டழிந்து
குடிகெடுக்குஞ்சூலையதுகுறிகண்டீரே. ௬௮

குன்மம்.

குன்மமதுதானெழுப்பும்விபரமென்னில்
குடல்தனிலேகல்லுமிகநெல்லுமூக்கும்
பின்னமுடன்வயிறுப்பிச்சோரைச்சார்ந்தால்
புரளுவதுகுடலோடேமாடுபற்றும்
அன்னமதுசெரிக்காதுமாசினாலே
அதுவுயரம்உமிமூக்குக்கிருமிபுக்கும்
வன்னமலைக்குயிலாளேகுன்மரோகம்
சற்றால்குன்மமறும்வகைதான்பாரே. ௬௯

சீர்பெறவேநீரிழவுதிரந்தானேது
சேர்க்கையுந்தான்தொந்தத்தில்வியாதியேது
பாரறியக்கனுமியினுற்புழுக்கவேது
பண்புடனேவாதங்கள்பகைத்தமேது
பேர்பெறவேமூலத்தின்கடுப்புமேது
பிலமாகக்காமாலைபாண்டுவேது
கூர்பெறவேகுறிப்பறிந்துசொல்வீரென்னக்
கோமானேயிதுபொருளைக்கூறுவீரே. ௱

சங்கையில்லாத்திரியோகஞ்சார்ந்தயோசை
தானுருவியஸ்தியிலேதொங்கிப்பின்னை
பொங்கியதுஊனுருவித்தசையைச்சார்ந்தால்
புரைசித்துநாவமெல்லாம்பிரமைகெட்டு
கங்குலித்தபுழுப்போலேதேகமெல்லாங்
காரியங்கேளுள்ளுலர்ந்துகார்ப்பரேல்நீரைப்
பங்கிலங்கேபவுரியிட்டநீரையெல்லாம்
பாழானவிஷநாம்பைப்பற்றிச்சாயம். ௱க

திரிபோகஞ்செய்ததினுல்வேவுகொண்டு
சிரசுமட்டும்வெந்துருகக்கனலேமீறிக்
குறியுடனேமேகந்தான்கொடுமைசெய்து
குறைந்துவருந்தாதுவெல்லாங்குன்றிப்போகும்
நெறியுடனேபால்நெய்களிறைச்சிமீன்தான்
நெய்ச்செத்தால்மிகுதிகொண்டால்நெருங்குமேகம்
அறியுடனேதயிருமாமிசங்கடானு
மடிக்கடியுண்பதுமேகந்தானே. ௱உ

சாகைவரலாறதனைச்சாற்றக்கேளு
தருசுரத்தில்வாய்வெழும்பியிரல்வெந்து
ஆகமெல்லாம்வெளுப்பேறியிரத்தம்வற்றி
அடிவயிற்றிற்கனத்துமெள்ளக்கூம்பிவீங்கி
மோகமுடன்தாதுகெட்டேளமாங்கைதபோல
மூட்டிவருங்கும்பதிலேவேவுகொண்டு
தாகமுறும்பசிதணிந்துகைகாலோயுஞ்
சண்டாளகுணங்கள்செய்யுஞ்சோகைதானே. ௱ந

சோகைக்குணம்.

ஆகாரமாறுக்கும்நடுவேநின்ற
அலம்புகசநாடியங்கேயகைவைப்பற்றிக்
கேதுாரமூலத்தேநோக்கும்போது
கிரிச்சனமாம்வாயுவங்கேகீழநோக்கும்
சூதரத்தில்மேவவுகண்டுசுழுனையூடே
சுக்கிலத்தின்மலங்கனிந்துஊனுவெந்து

பாதூரமூலத்திலடுக்கும்பின்னே
பலவிதமாய்சீழூரத்தஞ்சலமும்வீழும். ௱௪

குருநாடி.

அந்தமாயிடைநாடிசிரத்திலேற
அப்பசுத்தூடுசென்றுபத்தைமேவி
சுந்தரமாய்வாய்வங்கேசிரத்தினூடு
சுறுக்கெனவேயிடையினூடுநாற்றங்கொண்டு
தந்திரமாய்த்தொந்தத்தில்பதியும்நோய்கள்
சலமுடனேசீயும்ரத்தந்தொந்தமாக
குந்திரமாயுட்புகுந்து நோய்கள்செய்யுங்
குறிப்பறிவீர்சிரசுசூலைகுணமென்றேதே. ௱௫

சீர்பெருகுநாயகனேவாயுபுத்திரர்
திரமான அத்தியென்றேநாடேபோடே
பாரறியக்கடினமுறும்வன்னியோடும்
பண்புடையசிரசங்கேபதிந்துபோகும்
வார்பெரியவாயுவங்கேகபாலந்தன்னில்
வகையானவிசைநரம்பை வளைத்துப்பற்றிக்
கார்பெருகிவரும்போலேயூனுருவிக்
காற்றதனில்வந்தடைக்குங்குருதிப்பாரே. ௱௬

நாயென்றால்தசநாடிபத்துண்டாகும்
நலமுடனேயோர்விரலிலிரண்டுநாடி
கூடியங்கேயைவிரலுங்குவித்துநிற்குங்
குறிப்பறிவீரொருநாடிகுசல்களெல்லாம்
ஆடிநிற்கும்விரலைந்திலொன்றுக்குள்ளே
அதனுடையசூட்சநிலைவாதவீட்டில்
தாடிநிற்கும்மாவிரல்மூன்றுருவாய்ப்பாய்ந்து
சாதகமாய்நின்றநிலைதன்னைப்பாரே. ௱௭

நாடிநிலையறிய.

பாரென்றாலைந்துக்குநடுவதாகப்
பற்றிலன்றுவாலாறுதன்னைப்பார்க்கில்
சீரொன்றேபித்தத்தின்முன்னேநிற்கும்
தெசநாடிபத்துக்குந்தானாய்நிற்கும்
மோரென்றால்வாதமென்றுசொல்வார்மூடர்
மேவியங்கேபார்ப்பளவில்வேறாய்நிற்கும்
தார்கொண்டகுருநாடிதன்னையாய்ந்தால்
தன்வந்திரியவனென்றுசாற்றலாமே. ௱௮

பேர்பெரியகுருநாடி குணமேதென்னில்
புரண்டுவரும்வாதத்திலட்டைபோலே
சீறிபமிருமலிருபத்தொன்றும்
கினவுசொறிமிருதியுண்டாங்தேகம்வாடும்

சூர்தெரியபித்தத்திலாமைபோலே
தோன்றிடுமேலசுரமிருக்குஞ்சுற்றம்வாழ்நீ
கார்பெருகிவருவதுபோல்வேர்வைதோன்றுங்
கதிர்த்திடுமேல்நீர்கடுக்குங்கைகாலோயும. ௱௯
சிலேற்பனத்திற்குருநாடிசிங்கம்போலச்
சீறிநிற்குமாமாகில்சன்னிதோன்றும்
ஆர்ப்பனத்தையூடுருவித்தோன்றுமாகில்
ஆபாத்தியமாமானகுறிதப்பாதப்பா
சார்ப்பெனவேகுன்றுனபோல்குன்றிப்போகில்
கழியும்வயிர்கடுப்பெடுக்குங்கைகாலோயும்
தேர்ப்பதுவுமுல்லையில்லைதிட்டஞ்சொன்னேன்
தேர்ந்தகுருநாடிநிலைதோய்ந்துபாரே. ௱௰
ஏற்றமுள்ளகுருநாடிகன்னைப்பார்க்கில்
இடைகலையும்பின்கலையுமிசைந்துமாறி
மாற்றமில்லாச்சுழுமுனைதான்தன்னைப்பற்றி
மாறிநிற்குங்கத்தரிகைமாறல்போலே
சீற்றமுடன்வாதபித்தசிலேற்பனமொன்றே
தெசநாடிபத்துக்குந்தானாய்நின்று
கோத்தசிருகுருநாடிநிலையைப்பாக்கில்
கோமான்றன்றிருக்கூத்தைக்கூறலாமே. ௱௰௧

குருநாடி—குபதேசம்.

அகாரமுதலைம்பத்தோரெழுத்துந்தானும்
அஞ்செழுத்துமெட்டெழுத்துமதுவேயாகும்
விகாரமுதனிலையொளிவதுவேயாகும்
விதமுடனேயாதாரமாறுமாகும்
உதாரமுடன்தத்துவங்கடொண்ணூற்றாறு
ஊர்ந்துநிற்குங்குருநாடிபொன்றுபோமே
சிகாரமெனுமட்சரத்தைநடிவாசி
சிவமென்றநிலையறிந்துதெளிந்துபாரே. ௱௰௨

குருபதேசம்.

டார்க்கையிலேஐயுங்கிலியும்வசியமென்று
பற்றிநின்றமூலத்திலூன்றிநின்ற
ஏற்கையுடனெட்டெழுத்த-ஓ-ம்-ஆங்-உங்-ரங்யநமச்சிவாவென்
இடைப்பின்கலையின்சுழுனையூடே
தாக்கையிலேசூரியன்போலவட்டங்காணுந்
தாடணையாயநடனமிடுந்தவத்தைக்கண்டு
ஆக்கமுடனவிழ்தங்களீவாயானால்
அரகராசிவசிவா அறிந்துநோக்கே. ௱௰௩
அஞ்செழுத்தைமாறியங்கேமாறிமாறி
அஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து அருளைப்போற்றி

அஞ்செழுத்தைச்சடத்திலங்கேநிருத்திக்கொண்டு
அருள்பெறலையாயிரத்தெண்ணுருத்தானோதி
அஞ்செழுத்தையுருவேற்றச்சித்தியாச்சு
அவுஷதமுஞ்சிந்தியாமறிந்துநோக்க
அஞ்செழுத்தாறகற்பமுண்ணயாக்கையழியாது
அரகராவிப்புதுமையருமைதானே. ௱௰௪

இந்தமுறைசெய்தவர்க்குமருந்துசித்தி
இயல்பாகசடத்துக்குச்சுத்தியாச்சு
முந்தவேமந்திரத்தைவெளிவிடாதே
முன்னுரைத்த நூலைப்போலகொடுக்கவேண்டாம்
அந்தரத்திலெழுநரகில்வீழாதேநீ
ஆருக்குமுந்நூலையீயவேண்டாம்
வந்தவந்தசீஷநுக்குக்கொடுக்கவேண்டாம்
வார்த்தையினாற்பகர்தானமெத்தவுண்டு
தொந்தமுடனுன்வயிற்றிற்பிறந்தபிள்ளை
தொடுகுறியுஞ்சொல்லியுடன்கொடுக்கநன்றே. ௱௰௫

ஒன்றானசீஷனுக்குநூல்தானீய
ஒருதரம்போல்நூறுதரமனதைச்சோதி
தன்றாகமனதிருந்தால்தனத்தைக்கேளு
நழுகியவர்போவரென்றால்நூலீயாதே
குன்றாகச்சொன்னத்தைத்தருவானாகில்
கொடுத்திடுநீநூல்வாங்குநாலத்தொன்று
மன்றானசீஷனுக்குமந்திரமீயாதே
மனந்தெளிந்துகசடற்றால்மந்திரமீயே. ௱௰௬

அடுக்குமுதல்பொன்றருவேனென்பர்கள்ளர்
அவனுடையகள்ளமெல்லாம்அறிந்துகொண்டு
முடுக்கமுடன்வித்தையெல்லாங்கற்றுக்கொண்டு
முகம்பாரான்பொருளீயான்முன்னேநில்லான்
கடுக்கெனவேவார்த்தைசொல்வன்வயித்தியங்கைவந்தால்
காலன்வலைக்குள்ளாவார்கசட்டுமாண்பர்
துடுக்குடனேயவனிடத்தில் சொல்லவேண்டாம்
துரோகியவன்படித்தவித்தைதூளாய்ப்போமே. ௱௰௭

சீஷனென்றால்வகைகேளுதேன்போல்நெஞ்சந்
தெண்டனிட்டுப்பணிந்துமேகையுங்கூப்பிப்
பாசமுடன் தருவெனக்குத்தெய்வமென்று
பணிவிடைகளனுதினமும்பண்பாய்ச்செய்து
நேசமுடன்கனவிலுமேநினைவைவைத்து
நிலைமையுடன்தான்சொர்னந் தருவுக்கீந்தோன்
வாசமுடன்குருகற்றவித்தையெல்லாம்
[illegible]ர்ந்துமங்கேமலைபோலேசெல்வமாமே ௱௰௮

செல்வமுடன்வித்தையுண்டாஞ்சிறப்புண்டாகுஞ்
 செகத்திலேகண்டவர்க்குச்செல்வனாவான்
சொல்வதென்றால்வானவர்க்குஞ்செல்லுந்தூது
 தொல்லுலகிலவனெனவுஞ்சுருதியாகும்
கல்வியென்றகல்வியெல்லாங்கருத்திற்றோன்றுங்
 கனியில்வைத்தியமுங்கைக்குள்ளாகும்
நல்லவனென்றுலகமெல்லாஞ்சொல்வார்சொல்வார்
 நற்குருவின்மனந்தெளிந்தால்நன்மைதானே. ௱௰௯

திருட்டினால்வந்ததொருசீஷன்றானுஞ்
 செகத்திலேபொய்யுரைத்துமெய்பேசாமல்
மருட்டினால்குருதேடிவருவான்மட்டி
 வார்த்தையினால்வாய்ஞானப்பேசிக்கொண்டு
உருட்டதனால்குருமனதை மருட்டிக்கொண்டு
 ஓகோவித்தையெல்லாங் கைக்குள்ளாக்கி
குருட்டானமாபாவி குருவுக்கென்று
 கொடுக்காமல்மனதெரியக்கொட்டினானே. ௱௨௰

வித்தைதனைதிருட்டாலேவேண்டிக்கொண்டு
 விதமறியுங்குருவாசான்மனதுநோக
சத்தியந்தான்மறந்துவிட்ட சண்டாளன்றான்
 தாரணியில்மானிடர்க்கு மருந்தையீந்தால்
சித்திதான்வாராது பிணிதான்மிஞ்சிச்
 செகத்திலுள்ளபேர்களெல்லாம் நகைப்பார்தானும்
முத்தியாம்வாராதமகாநோய்கொண்டு
 முறையானவவன்குடும்பமுழுதும்போமே. ௱௨௧

நாடியிடகூட்சனிலைபகுந்துசொல்வே
 நன்மணிக்கடைநாலுவிரலைதொட்டு
கூடியதோர்மணிக்கட்டில்விரல்தான்போட்டு
 கூறுடனேமூவிரலுங்குவித்துப்பார்க்கில்
தேடியதோராணுக்கு வலக்கரமேயாகுந்
 திறமுடையமங்கையர்க்குஇடக்சரமேயாகுங்
கூடியதோர்வாதபித்தசிலேற்பனத்துள்ளே
 கொட்டிநிற்குங்குருநாடிதுறந்துபாரே. ௧௨௨

ஒன்றுக்குமெட்டாதநாடிநேர்மை
 யீடுருவித்தாண்டி நிற்குமுன்னைமகேளு
வண்டுதான்மதுவருந்துநேர்மைபோல
 வாதபித்தசிலேற்பனத்தில்மதுவுண்டார்போல்
என்றைக்கும்வாதபித்தநடுவேநிற்கு
 மேறுவதுங்குறைவதுவு மில்லைசொன்னே

கன்றுக்குப்பால்சுரக்கும் பசுவைபோலே
காத்திருக்குங்குருநாடிக் காலைப்பாரே. ௫௨௩

குருநாடிநிலையரிபாக் குருடரெல்லாங்
கூட்டமிட்டுச்சாத்திரம்பேய்க்குசல்கள்சொல்வார்
